# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.197/2023

Deposition of witness for Prosecution – PW–1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பெருமாள் | Caste | : | |
| S/o. | : | அங்கமுத்து | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed on 09.09.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

<u>முதல் விசாரணை :</u>

நான் ஊனத்தூர் கிராமம் நேரு நகரில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். நான் தற்போது கெங்கவள்ளி வட்டார அலுவலகத்தில் வட்டார ஒருங்கிணைப்பாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் தலைவாசல் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டார ஒருங்கிணைப்பாளராக பணியாற்றி வந்தேன்.

எனக்கு திருமணம் ஆகி 15 ஆண்டுகள் ஆகிறது. நான் குடியிருந்த வீட்டிற்கு எதிரி வீட்டில் ஆஜர் எதிரி குடியிருந்து வந்தார்.

ஆஜர் எதிரி என் மனைவியிடம் தவறாக பேசி பழகி வந்ததால் நான் எதிரி ஆனந்தனை கண்டித்து வந்தேன். 01.06.2020ம் தேதி இரவு 8.00 மணிக்கு என் மனைவி என்னிடம் சண்டை போட்டுக்கொண்டு எங்கோ சென்றுவிட்டார் என்று நான் தேடிச்சென்றேன். அப்போது ஊனத்தூர் அரசுபள்ளிக்கு பின்புறம் உள்ள காலியிடத்தில் சென்று தேடினேன். அந்த இடத்தில் போதையில் இருந்த எதிரி ஆனந்தன் உன் பொண்டாட்டிய தேடி வந்தியாடா நொண்டி தேவடியா பயலே என்று பலர் முன்னிலையில் அசிங்கப்படுத்தி மாடு கட்டும் இரும்பு கம்பியை கொண்டு எனது இடது தொடையிலும் வலது கையிலும் தொடர்ந்து தாக்கினார். எனக்கு வலது கை எலும்பில் முறிவு ஏற்பட்டது. அப்போது அந்த இடத்திற்கு வந்த கதிர்வேல் மகன் அழகேசன் என்பவர் விலக்கி விட்டு சென்றார். எலும்பு முறிவு ஏற்பட்டு நான் ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் சென்றேன். அங்கு எனக்கு எலும்பு முறிவிற்காக பிளேட் வைக்கப்பட்டது. உள்நோயாளியாக நான் அங்கு சிகிச்சை பெற்றேன். நான் சிகிச்சையில் இருக்கும்போது தலைவாசல் போலிசார் வந்து என்னிடம் வாக்குமூலம் பெற்றார்கள். அதில் நான் கையெழுத்து செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். போலிசார் இது குறித்து என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை. Sd/– S.Sumathy,

Principal Sessions Judge, Salem.